# பதவி வெற்றிடம்
# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பின்வரும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தகைமையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிப்பாளர் ( விழிப்புணர்வூட்டல்) – HM-1-1 - 01 பதவி

**அ.. வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் :**

**கல்வித் தகைமை :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றிலிருந்து கலை அல்லது வணிகம் அல்லது விஞ்ஞானம் அல்லது ஆகிய பாடத்துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இளமாணிப்பட்டத்துடன் குறிப்பிட்ட துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதுவிஞ்ஞானமாணி / முதுகலைமாணி பட்டம்

**மற்றும்**

**அநுபவம் :**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க சபை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் " முகாமைத்துவ மட்டத்திலான " (MM 1-1) பதவிக்கு நிகரான பதவியொன்றில் "இ" பந்தியின் விடயப்பரப்புக்கு ஏற்ப ஆகக்குறைந்தது பதினைந்து வருடகால (15) அநுபவத்துடனான மிகவும் சிறந்த சேவையினை ஆற்றியிருத்தல்.

**ஆ. உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் :**

(1) மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(2) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ சேவைகள் தொகுதியின் (MM 1- 1) முதலாம் தரத்தைச் சேர்ந்த பதவியில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக்காலத்தை கொண்டிருத்தல்.

**இ. பதவிக்கான பணிகள் :**

1. நிலையான திட்டம் மற்றும் வழிகாட்டல் திட்டத்துக்கு ஏற்ப விழிப்புணர்வூட்டல் பிரிவின் நடவடிக்கைகளை உபாயமார்க்கமாக திட்டமிடுதல்.
2. அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்த தணிப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அறிவூட்டலை மேம்படுத்துதலும் இது பற்றிய ஆர்வத்தை அதிகரித்தலும்.
3. பல்கலைக்கழக பாடவிதானத்தில் அனர்த்த அபாய தணிப்பினை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதலும் இதற்காக பட்டதாரிகளுக்கு வசதிப்படுத்துதலும் விழிப்புணர்வினை அதிகரித்தலும்.
4. கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல்.
5. பயிற்சி மற்றும் குறுங்கால பாடநெறிகள் மூலம் தொழில்சார் குழுக்கள் மத்தியில் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்த அபாய தணிப்பு பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல்.

6. அரச / தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தலும் அரச நிறுவனங்களுக்கான பயிற்சி உபகரணங்களை வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட நிறுவனங்களின் அனர்த்த முகாமைத்துவ கொள்திறனை அதிகரித்தலும்.
7. தொடர்ச்சியான கல்வி விடயப்பரப்பில் அனர்த்த முகாமைத்துவத்தை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.
8. தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்.
9. அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்த தணிப்பு குறித்து கொழும்பு தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணியாட்குழுவினரை பயிற்றுவித்தல்
10. தேவை ஏற்படும் பட்சத்தில் தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை பிரதிநிதித்துவம் செய்தல்.
11. விழிப்புணர்வூட்டல் பிரிவின் வருடாந்த வரவு - செலவினை தயார் செய்தல், கருத்திட்ட தயாரிப்பு, பௌதீக மற்றும் நிதி தேர்ச்சியை மேற்பார்வை செய்தல்.
12. விழிப்புணர்வூட்டல் பிரிவின் பணியாட்குழுவினரின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் இதன் வழியாக குறிப்பிட்ட உத்தேச இலக்குகளை அடைவதற்கான அலுவலக சூழலை தயார் செய்தல்.
13. மேற்குறிப்பிட்ட கடமைகளுக்கு மேலதிகமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் காலத்துக்குக் காலம் பொறுப்பளிக்கப்படும் இப்பதவிக்கு ஏற்புடைத்தான கடமைகளை நிறைவேற்றவதற்கும் பிணைந்திருத்தல்.

**ஈ. சம்பள முறை :**

பதவிக்கான சம்பளக் கொடுப்பனவானது முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 இற்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

HM 1-1 - 2016- ரூ.81,670-15x2,270-115,720.00. வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, வாழ்க்கைத் தொழில் கொடுப்பனவு மற்றும் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**ஏனைய வசதிகள் :**

2015.05.25 ஆந் திகதிய அரச தொழில்முயற்சி திணைக்களத்தின் PED 01/2015 இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப உத்தியோகபூர்வ வாகனம் / போக்குவரத்து கொடுப்பனவுடன் எரிபொருள் கொடுப்பனவும் மற்றும் 2022.01.18 ஆந் திகதிய 02/2022 இலக்கத்திற்கு ஏற்ப தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்.

**உ. வயது :**

35 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இங்கு குறிப்பிடப்படும் ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஊ. நியமனத்தின் தன்மை :**

நிலையான, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு உரித்துடையவராவார்.

வெளிவாரி விண்ணப்பதாரிகள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுமிடத்து, மூன்று (03) வருடகால நன்னடத்தைக் காலத்துக்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்.

உள் விண்ணப்பதாரர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால்இ ஒரு வருடம் செயல்படும் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

**எ. ஏனைய தேவைகள் :**

**சகல விண்ணப்பதாரிகளும்**

(1) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(2) பதவிக்கான பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல்ரீதியான மற்றும் உளரீதியான இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) நன்மதிப்புக்குரியவராகக் காணப்படுதல்.

**ஏ. விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய விதம் :**

விண்ணபப்படிவங்கள் www.dmc.gov.lk இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், இதற்கமைய தயார் செய்யப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை 2023.01.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் " பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், இலக்கம் 120/2, விந்யா மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது மேல் மூலையில் " பணிப்பாளர் ( விழிப்புணர்வூட்டல்)" எனவும் விண்ணபப்படிவத்தில் வெளிவாரி விண்ணபதாரியா, உள்ளக விண்ணப்பதாரியா எனவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கையில் வெளிவாரி விண்ணப்பதாரியாக விண்ணப்பிப்பதற்கான இயலுமை இல்லை.

விண்ணபப்படிவத்துடன் விண்ணப்பதாரிக்கு உரித்துடைய சகல கல்வித் சான்றிதழ்கள், தொழில்சார் சான்றிதழ்கள், பணிச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களினதும் தேசிய அடையாள அட்டையினதும் பிரதிகளை கட்டாயமாக அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலில் காணாமற்போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணபப்படிவங்கள் குறித்து இந்நிலையம் பொறுப்புக்கூறாது.

ஏற்கனவே அரச பணியில் / மாகாண அரச சேவையில் அல்லது அரச துறையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்படிவத்தை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு காணப்படாத மற்றும் விண்ணபப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணபப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**கவனத்துக்கு :**

இந்த விளம்பரம் www.dmc.gov.lk இணையத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்